Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 132
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஆனி 9 ரபி: அவ் 25 சனிக்கிழமை (22-6-68)




# காணி சுவீகரிப்பு உத்தரவு விரைவில் வெளியாகும்

## 3,000 புதிய அரசாங்க ஊழியரை எதிர் நோக்கும் பிரச்னை

கொழும்பு, வெள்ளி

புதிய அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சி பெறுவதற்கு தேசிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கால எல்லை இம்மாதத்துடன் முடிவடைவதால், சுமார் மூவாயிரம் புதிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளார்கள்.

இவர்களில் அநேகமானோர் சிங்களத்தில் போதிய தேர்ச்சிபெறவில்லையென்றும், ஒருசிலர் முற்றாகவே சிங்கள தேர்ச்சிபெற மறுத்துவிட்டனர் என்றும் தெரியவருகிறது.

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்கள தேர்ச்சி பெறும் கால எல்லையை மேலும் ஏழு வருடங்களுக்கு நீடிக்கும்படி ஐக்கியதொழிற் சங்க சம்மேளனமும் இலங்கை தேசிய அரசாங்க சேவையாளர் தொழிற்சங்க சம்மேளமும் அரசாங்கத்தைக் கோரியுள்ளன. இச் சம்மேளனத்திலுள்ள சில சங்கத்தினருக்கு, சிங்கள தேர்ச்சி தேவையில்லையென அறிவிக்கப்பட்டிருப்பதால், மற்றும் சங்கங்களும் தங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமெனக் கோரியுள்ளன.

புதிய அரசாங்க ஊழியர் எதிர்நோக்கியிருக்கும் வேலைநீக்க ஆபத்தை நீக்கும்படியும், அவர்களின் இதர உரிமைகளை வளங்கும்படியும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் கோரியுள்ளது.

## மாநகரசபை நிர்வாகம் நஷ்டஈடுகோரும்

### முன்னாள் அங்கத்தவர்கள்சிலர் ஆலோசனை

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கருகில் புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு இடம்கொடுக்க இதுவரை யாழ். மாநகரசபையினர் மறுத்துவந்த காணியை சுவீகரிப்பதற்கான உத்தரவை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சில தினங்களுக்குள் பிறப்பிப்பாரெனத் தெரியவருகிறது.**

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கும் மின்சார நிலையத்துக்குமிடையிலுள்ள காணியை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக அரசாங்கம் சுவீகரிக்கவிருப்பதாக 'ஈழநாடு' பத்திரிகையின் நேற்றைய நகரப்பதிப்பில் செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து கலைக்கப்பட்ட மாநகர சபையின் அங்கத்தவர்கள் கூடி ஆலோசனை செய்ததாகவும் இதில் முன்னாள்மேயர்கள் சிலரும்கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது.

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான இக்காணியை அரசாங்கம் சுவீகரித்து அதில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தைக் கட்டுவதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் கொடுப்பதற்கு யாழ். மாநகரசபையின் தற்போதைய நிர்வாகம் தடை நடவடிக்கை எதுவும் எடுக்கமாட்டாதென்றும் ஆனல் அந்த நிலத்துக்கு நஷ்டஈடு கோரக் கூடுமென்றும் அறியப்படுகிறது.

## 'அமெரிக்காவில் அராஜகம் தலையெடுக்காது தடுப்போம்'

### விசாரணைச் சபைத் தலைவர் டாக்டர் ஐஸனோவர் நம்பிக்கை

வாஷிங்டன், ஜூன் 21

அமெரிக்காவில் அடிக்கடி ஏற்படும் பலாத்காரசம்பவங்களுக்கான காரணங்களை ஆராய்ந்து அறிவதன் மூலம் அமெரிக்கா சுதந்திரமாக முன்னேற்றமடைந்த சமுதாயமாக, கொடுமைகள், கலவரங்கள் அற்ற ஒரு நாடாக விளங்க வாய்ப்பேற்படும் என்று டாக்டர் மில்டன் ஐஸனோவர் இங்கு குறிப்பிட்டார்.

செனட்டர் ரொபட் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பலாத்காரச் செயல்கள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். இக் குழுவின் தலைவராக டாக்டர் மில்டன் ஐஸனோவர் கடமையாற்றுகிறார். இவ் விசாரணைச்சபையின் முதலாவது கட்டம் நடைபெற்று முடிந்தவுடன் மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார். டாக்டர் ஐஸனோவர் முன்னாள் ஜனாதிபதி ஐசன்ஹோவரின் சகோதரராவார்.

டாக்டர் ஐஸனோவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில் "அமெரிக்காவின் பல பாகங்களுக்கும் விசாரணைகள் நடாத்துவதற்காக நாங்கள் செல்வோம். அமெரிக்காவில் மேற்கொண்டும் அராஜகம் தலையெடுக்காது தடுப்பதற்கான சகல மார்க்கங்களையும் ஆராய்ந்தறிவோம். இவ்வாண்டுக் கிடையில் ஓர் இடைக்கால அறிக்கையை வெளியிடவும் விரும்புகின்றோம்'' என்றார்.

## பஸ் பிரயாணிகள் குறை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து காலையில்புறப்பட்டு தூர இடத்துக்குச் செல்லும் பஸ்களின் குறிப்பிட்ட பஸ் எங்கு செல்கின்றதுஎன்று தெரிவிக்கும் 'போட்' இல்லாதிருப்பதால் இடையில் பஸ் தரிப்புகளில் நிற்கும் மக்கள் பஸ்ஸைத் தவறவிடவேண்டிய நிலைமை ஏற்படுகிறதாம்.

குறிப்பாக சேரதீவ செல்லும் பஸ்ஸில் இவ்வித பலகை இல்லாதிருப்பதால் பஸ்தரிப்பில் பஸ்ஸை எதிர்பார்த்துநிற்கும் மக்கள் பஸ்ஸை அடையாளம் கண்டு பிடிக்க முடியாமலிருப்பதாக புகார்கள் தெரிவிக்கின்றனர். [ந. நி.]

## வேலை நிறுத்தம்

கொழும்பு, வெள்ளி

மகாரகம பண்டிப்போவில் இன்று ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் நூற்றுக்கும் அதிகமான பஸ்கள் ஓடவில்லை.

## வாரத்துக்கு 5 நாள் வேலை திட்டம்பூர்த்தி

கொழும்பு, வெள்ளி

வாரத்தில் ஐந்துநாள் மட்டும் வேலைசெய்யும் திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டது. இத்திட்டத்தை விரைவில் அங்கீகரிக்குமாறு நிதிஅமைச்சர் யு. பி. வன்னிநாயகா மந்திரிசபையைக் கேட்டிருக்கிறார்.

போயா தினத்துக்கு முதல் நாள் முழுவேலை நாளாக ஆக்கி போயா தினத்துக்கு அடுத்தநாளை முழுவிடுமுறை நாளாக்க வேண்டுமென அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கேட்டிருந்தது.

## பென்ஷன் கிடைக்கும்

கொழும்பு, வெள்ளி

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளைச் சேர்ந்த வீரர்களின் விதவைகள், அனாதைகளுக்கு பென்ஷன் வழங்கும் [illegible] கொண்டு வரப்பட்டுள்ளது.

குருநகர் வீடமைப்புத்திட்டம்

## வாடகைப்பணம் கூட்டியது ஏன்; எப்படி?

### விசேஷ ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

குருநகர் வீடமைப்புத்திட்டத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்களின்வாடகை உயர்த்தப்படுவதற்குமுன் யாழ்ப்பாணம்எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் ஆலோசனை தெரிவித்தாரென்றும் அதிகரிக்கப்பட்ட வாடகைப் பணத்தைச் செலுத்த முடியாத நிலையிலுள்ளவர்கள் இதுபற்றி தங்களிடம் முறையிட்டால் அதுபற்றி ஆலோசித்து நிவாரணம் வழங்க தயாராக இருப்பதாக உதவி உள்ளூராட்சி ஆணையாளரும் யாழ் மாநகரசபை விசேஷ ஆணையாளர்களில் ஒருவருமான திரு. எஸ். முருகவேள் நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாடகைப்பணம் அதிகரிக்கப்படவேண்டியேற்பட்ட அவசியம்பற்றி தமதுஅறிக்கையில் முருகவேள் விளக்கிக் கூறியிருக்கிறார்.

"மதிப்பீட்டாளர்கள் இத்தக்குடியிருப்பு வீடுகளைப் பார்வையிட்டு அவற்றுக்கு 20 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரை வாடகை அறவிடலாமெனத் தெரிவித்திருந்தனர். இருபது வருடங்களில் இந்த வீடுகள் விஸ்தரிக்கப்பட்டும் மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டிருப்பதுமே இதற்குக்காரணம் எனினும் ஒரே மாதிரியாக வாடகை உயர்த்தப்படவிருப்பதாக இத்திட்டத்திலுள்ள குடியிருப்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதன்பின் யாழ்ப்பாணஎம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலம் 19-2-68-ல் விசேஷ ஆணையாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்பேச்சுவார்த்தையின் போது திரு. பொன்னம்பலம் கீழ்க்கண்டகருத்தைத் தெரிவித்தார்:- குருநகர் வீடமைப்புத் திட்ட வாடகைப்பணம் 5 ரூபாவாக இருந்து திடீரென 20

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பொறாமை, வெறுப்பு, நம்பிக்கையின்மை இவை நம் மனதின் மூன்று தீமைகள். அவதூறு செய்வது, திட்டுவது, வம்பளப்பது, பொய் சொல்லுவது இவைதான்கும் நாக்கின் தீமைகள். களவு, கொலை காமம் இவை உடலின் தீமைகள். இராவணனின் தலைபோல் இவை பத்தையும் இராமனால் தான் கொல்லமுடிந்தது. அதுபோல் அந்த இராமநாமம் நமது இப்பத்து தீமைகளையும் ஒழித்து நம்மை தூய்மைப் படுத்தும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Cables: EELANAD Jaffna
Post Box 43 Jaffna
Telephone 389.

கீலக வருஷம் ஆனி மாதம் 9-ந்திகதி
(22-6-68)

## விஷ(ம) விளம்பரம்

எதற்கும் ஓர் எல்லையுண்டு. விஷ(ம) பிரசாரத்துக்கும் விஷமத்தனத்துக்கும் எல்லையில்லையா என்று கேட்கவேண்டிய அவசியத்தை லண்டனிலுள்ள இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபையினர் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

'மிருகக் காட்சிச்சாலைக்கு வெள்ளைக்கரடி வந்திருக்கிறது. வந்துபாருங்கள்' என்று விளம்பரம் செய்தால் அதில் அர்த்தமுண்டு. ஆலயத் திருவிழாக் காலங்களில், 'என்ன விநோதம் பாருமுண்டம் இல்லாத் தலை கேள்விக்குப் பதிலளிக்கும் வேடிக்கை பாரு' என்று வியாபார விளம்பரம்செய்வதிலும் அர்த்தமிருக்கிறது. ஆனால்,

'நகையலங்காரச் சிங்கள அழகிகளையும் கறுப்புத் தமிழர்களையும் சந்திக்க விரும்பும் உல்லாசப்பிரயாணிகளே! இவ்வாண்டுக்குள் இலங்கைக்கு ஒருதடவை விஜயம் செய்து விடுங்கள்'' என்று லண்டனிலுள்ள இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை, 'போனால் கிடைக்காது, பொழுதுபட்டால் கிட்டாது' என்ற பத்தாம்பசலி முறையில் விளம்பரம் வெளியிட்டிருப்பது வேடிக்கையானது மட்டுமல்ல அதன் விஷமத்தனம் வேதனையுமளிப்பதாகும்.

விளம்பரம் ஒரு கலை. அது காலத்துடன் வளர்ச்சியடைந்து நவீனமடைந்திருக்கிறது. உலகநாடுகள் பலவும் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதற்கு எத்தனையோ நவீன முறையில்விளம்பரம்செய்கின்றன; அதில் வெற்றியுமீட்டியுள்ளன. பிரிட்டிஷ் தேசியப் பத்திரிகைகளில் இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையினர் வெளியிட்டுள்ள இந்த துவேஷப் பிரசார விளம்பரங்களைப்பார்த்து பிரிட்டிஷ் மக்கள்தான் என்ன நினைத்திருப்பார்கள். இனப்பாகுபாடு காட்டுவதைக் கொள்கையாகக் கொண்டிருக்கும் தென்னாபிரிக்காகூட இப்படி ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்ததாகத் தெரியவில்லை.

லண்டனிலுள்ள இலங்கை உல்லாசப் பிரயாணச்சபையினர் தங்களை என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; இலங்கையைப் பற்றித்தான் அவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

'கறுப்புத்தமிழரைச்சந்திக்கஇலங்கைக்கு வாருங்கள்' என்பதன் அர்த்தம் இலங்கை என்ன மிருகக் காட்சிச்சாலையா? தமிழர்கள் அதிசயப்பொருள்களா? கறுப்பு என்றால் வெறுப்பு எதற்கு? சியாமள வண்ணன் என்று விஷ்ணுவை தமிழ்மக்கள் அன்புடன் அழைத்து வணங்குகிறார்கள். விஷ்ணுவை வணங்கும் சிங்களபௌத்தர்களும் கறுப்பு என்று ஒதுக்கவில்லை; தெய்வம் என்றுதான் வணங்குகிறார்கள். 'மையோ, மரகதமோ, மறிகடலோ, மழைமுகிலோ, ஐயோ இவன் அழகு' என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமனின்அழகை அவனின் கறுத்த திருமேனியின் அழகை வர்ணிக்க வார்த்தையில்லாமல் அங்கலாய்க்கிறார். இது லண்டனிலுள்ளவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம்.

ஆனால் இலங்கையில் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தி தேசியஐக்கியத்தை நிலைநாட்டி, நாட்டை முன்னேற்றுவதற்கு பிரதமரும் அரசாங்கமும் செய்துவரும் பெருமுயற்சிகளைப்பற்றி அந்த 'லண்டன் சபை'யினர் அறியவில்லையா? இந்த இனத்துவேஷ விளம்பரம் இலங்கையின் மதிப்பைக் குறைத்து உல்லாசப்பிரயாணிகளையே இலங்கைக்குவராமல் செய்யும் சதித்திட்டமா?

லண்டனிலுள்ள இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையினரின் இந்த விஷமத்தனமான செயல் பற்றி உடனடியாக அரசாங்கம் விசாரணை நடத்தி அவர்கள்மீது தகுந்தநடவடிக்கை எடுக்கவேண்டும். இது தற்செயலாக, தெரியாத்தனமாக நடந்திருக்க முடியாது என்பதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை.

# இலங்கையின் இதயம் பற்றி கவியோகி

யாழ்ப்பாணம், சனி

''இலங்கையில் இந்து கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் என நான்கு மதத்தைச் சேர்ந்த மக்கள் வாழுகின்றார்கள். மதங்கள் பெயரால் வேறுபட்டாலும் அவற்றின் அடிப்படைத் தத்துவமும் அவை போதிக்கும் மார்க்கமும் ஒன்றே. இதயத்தின் நான்கு அறையைப் போல நான்கு மதமும் இலங்கையின் இதயம் போன்றவை. எனவே இங்கு வாழும் நான்கு மத மக்களும் ஒன்று பட்டு சமய வேறுபாடின்றி ஐக்கிய இலங்கையை உருவாக்க வேண்டும்.''

இவ்வாறு கவியோகி சுத்தானந்த பாரதியார் யாழ். நகர மண்டபத்தில் சொற்பொழிவாற்றுகையில் தெரிவித்தார்.

இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்த உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தமது தலைமை உரையில் திரு. சுத்தானந்த பாரதியார் ஒரு மகரிஷிமட்டுமன்றி அவர் கவியோகி என்றும் குறிப்பிட்டார்.

எஞ்ஜினியர் திரு. வைத்திலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துகையில் சுத்தானந்தர் முன்னர் யாழ்ப்பாணம் வந்துள்ளாரென்றும், இவர் இங்கு வரப்பெற்றதே தாம் செய்த தவப்பயன் என்றும் தெரிவித்தார்.

சுத்தானந்த பாரதியார் மேலும் பேசியதாவது:—

ஈழத்திலுள்ள மக்கள் எதையும் சொன்னால் கிரகிக்கக் கூடிய சக்தி உள்ளவர்களாய் உள்ளார்கள். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. சரஸ்வதி இங்கு வாழும் ஒவ்வொருவரது நாவிலும் மனதிலும் கொலுவிருக்கின்றாள் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை;

'ஜீவசிவரகஸ்யம்' பற்றி இவர் பேசுகையில் சிவன் என்றால் ஜீவனுக்குப் பின்னால் நிற்கும் சக்தி என்றும் இதனை எல்லாச் சமயமும், எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளலாமென்றும், ஜீவ சிவரகஸ்யத்தை அடையும் போதுதான் நமது இலட்சியம் நிறைவேறுமென்றும் கூறினார்.

சிவம் தான் கடவுள் என்றும் கடவுள் என்பது மனத்தையும், மதத்தையும் கடந்தது என்றும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று படிகள் அற்ற பின்தான் ஜீவனும், சிவனும் ஒன்றாக இணையும் என்றும் இவர் மேலும் தெரிவித்தார். [கா. நி.]

## இன்றைய பலன்

[22 - 6 - 68]
ஆனி மீ 9 உ
சனிக்கிழமை

திதி-துவாதசிஇரவு10-50 வரை மேல் திரயோதசி.

நட்சத்திரம் - பரணி பகல் 12-33 வரை மேல் கார்த்திகை.

ராகுகாலம் - 8-54—10-24

சுபநேரம் - 2-54—4-24

இன்று பிறந்தவர்களுக்கு: இவ்வாண்டு செய்தொழில் மந்த நிலை. உத்தியோகத்தர்களுக்கு உற்சாகம் வேண்டும். நம்பிக்கை மோசடி உண்டு. உறவினர் வருகை அமைதிக்குப் பங்கம். கல்வி பயிலுவோர் கவனம் வேண்டும்.

மேஷம் - காயிதக் கப்பலில் கரைசேரமுடியாது.

ரிஷபம் - போனவை திரும்பி வரும், போஜன சொகுசு.

மிதுனம்-நம்பநட நம்பி நடவாதே.

கடகம்-அன்னை வழி ஆதரவு அமைதி.

சிங்கம் - ஆற்றலுக்கு மதிப்பு, அறிவுரைகிடைக்கும்.

கன்னி-ஆணவப் பேச்சு ஆபத்தில் முடியும்.

துலாம்- சிநேகித நலன் செய்தொழில் விருத்தி.

விருச்சிகம் - குறுக்கு வழிச்சம்பத்து கொண்டு வரும் ஆபத்து.

தனுசு- பெற்றோர்மதிப்பு பெரியோர் உதவி.

மகரம் - உத்தியோகத் தொடர்புக்கு உகந்த நாள்.

கும்பம்- சிருடன் வாழ்வீர் சிறப்புத்தான்.

மீனம்- போட்டித் தொல்லையில் மாட்டிக் கொண்டார்.

[illegible] வேலுப்பிள்ளை

## சைவத்தை பரப்பியவர்

வவனியா, வெள்ளி

சமணர்களின் கொடுமைகளை அடக்கி சைவத்தைப் பரப்பியவர்களில் திருஞானசம்பந்தரும் ஒருவராவார். இவரின் சிறந்த குருபூஜையைக் கொண்டாடுவதுடன் நிற்காது ஒவ்வொரு சைவ வீடுதோறும் வைத்து காலையும், மாலையும் வணங்கிவருவதுடன். அவரின் இனிய பக்திப் பாடல்களையும் நித்தமும் பாடிவருவோம்.

வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூஜையில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வவனியாப் பகுதி வித்தியாதிகாரி திரு. நவரத்தினம்மேற்கண்டவாறு கூறினார்.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவற்குடான்முத்துமாரியம்மன் கும்பாபிஷேகம் இம்மாதம் 27-ம் தேதி நடைபெறவிருக்கிறது. நேற்று ஆரம்பமான கிரியாகால நிகழ்ச்சிகள் 27-ம் தேதி வரை தொடர்ந்து நடைபெறும்.

## 'நல்ல முறையில் பயன்படுத்துவோம்'

உடுப்பிட்டி, வெள்ளி

''பல்வேறு இடங்களிலுமுள்ள மக்களிடையேநெருங்கிய தொடர்பு ஏற்படுவதன் மூலம் சமூகப் பூசல்களையும் கருத்து வேற்றுமைகளையும் தடுக்கலாம். தபால், தந்தி, தொலைபேசிச் சேவைகள் மனிதனின் அன்றாட தேவைகளில் முக்கியஇடம் பெற்றுள்ளன. இச்சேவைகளை நாம் நல்லமுறையில் பயன் படுத்தவேண்டும்''

மேற்கண்டவாறு நாகர்கோவில் உபதபாற்கந்தோர் தொலைபேசி இணைப்பை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் கூறினார்.

## பாடசாலை அதிபர்கள் யோசனை

கொழும்பு, வெள்ளி

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு முன்னர் தங்களைக் கலந்தாலோசனை செய்யுமாறு கல்வி நிலையங்களின் அதிபர்கள் கல்வி அமைச்சைக் கோரியுள்ளனர். இவ்விதம் கலந்தாலோசனை செய்தால் மாணவர்களின் கல்வி பாதிக்கப் படமாட்டாதென அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

# ஐயாறன் எழுதுவது

ரோட்டரி சங்கக் கவர்னர் ஜே. ஆர். மேத்தா அவர்கள் தமது மனைவியருடன் பூப்பிரதட்சணம் செய்துவிட்டு ஜப்பான் மார்க்கமாக நேற்று இங்கு வந்திருந்தார்.

கூர்ஜரத்தைச் சேர்ந்த அவர் தமிழகத்திலே சென்னையில் குடியேறி பெரிய தொழிலதிபராகி யுள்ளார். பிரயாண விசேஷங்களைக் கேட்டதற்கு, அவர் நகைச்சுவையுடன் பதிலளித்தார். ஒருமாங்கனிக்காக விநாயகரும் குமரனும் போட்டியிட்டு பூப்பிரதட்சணம் செய்யச் சென்று முடிவில் இருவருக்கும் சச்சரவேற்பட்டதென்றும், பூப்பிரதட்சணம் செய்து வந்த தமக்கு ஏராளமான நல்ல யாழ்ப்பாண மாம்பழங்கள் இங்கு கிடைப்பதாகவும் சொன்னார்.

ஃ ஃ ஃ

ஒரு கூட்டம் நடக்கையில் இருவர் ஏதோ உரக்கப் பேசிக் கொண்டிருந்தனர். கவர்னர் மேத்தா இதைப் பார்த்துவிட்டு, அவர்களைத் திருத்த நகைச்சுவையுடன் ஒரு கதை சொன்னார்.

இரு ஆசாமிகளாம், சுவர்க்கத்திலிருந்து அழைப்பு வந்ததாக தவறாக நினைத்து அவர்கள், அங்கு சென்றதும், அங்கிருந்த காவலர், இவர்களுக்கு அங்கு வர இடமில்லை என்றும் தவறி வந்து விட்டதாகக் கூறவே, இருவரும் நரகத்துக்குச் சென்று விசாரித்தனர். ''இங்கும் உங்களுக்கு இடமில்லைத்தான். தவறாக வந்துவிட்டாலும், இங்கேயே இருங்கள்'' என்று அங்கிருந்த காவலர் மனமிரங்கி அவர்களை அங்கு அனுமதித்தனர்.

ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம், அவ்விரு ஆசாமிகளுக்குள்ளும் சச்சரவு அதிகரித்து மற்றவர்களுக்கு பெருந் தொல்லையாகிவிட்டது. உடனே நரகத்தின் காவலன் இத்தொல்லை தாங்காமல் தன் தலைவனுக்கு முறையிட்டான். ''இவர்களை இங்கு தயவுடன்சேர்த்தேன். ஆனால் இவர்களது தொல்லை தாங்கவில்லை. இருவரும் சண்டையிட்டு இந்த நரகத்தையே சுவர்க்கமாக்கிவிடுவார்கள் போல் தோன்றுகிறது. ஆகவே இவர்களை உடனே இங்கிருந்து வெளியேற்றிவிட வேண்டியதுதான்'' என்று முறையிட்டதாக மேத்தா அவர்கள் சொன்னதும் கூட்டத்தில் ஒரே சிரிப்பு. சம்பந்தப்பட்ட இருவருக்கும் நகைச்சுவையுடன் இடித்துக்கூறி நல்ல புத்திபுகட்டினார். இனிஅவர்கள் எந்தக் கூட்டத்திலும் பிறருக்குத் தொந்தரவு ஏற்படும்படி அப்படிப் பேசுவார்களா?

ஃ ஃ ஃ

சிவல் தொழிலாளி ஒருவரை தோட்டத்தில் சந்தித்தேன். நெற்றியில் சந்தனப் பொட்டிட்டு, சிரித்த முகத்துடன் இருந்தார். சைவ முறையைப்பற்றி அவரது கருத்தைக் கேட்டேன். ''சமூகத்துக்கு இது கெடுதல்தான். ஆனால் எங்கள் பொருளாதாரம் இது இல்லாவிட்டால் கெட்டுவிடும். ஏராளமானவர்கள் இதை நம்பி வாழ்கிறார்கள். இதை நிறுத்தினால் அவர்கள் பிழைப்புக்கு வேறென்ன செய்ய முடியும்?'' என்று கேட்டார்.

கள் பாவிப்பதுண்டா என்று கேட்டதற்கு, பல

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

வருடங்களுக்கு முன் தான் பாவித்து வந்ததாயும், ஆனால் பின்னர் அதன் தீமையை உணர்ந்து அதை விட்டுவிட்டதாகவும் சொன்னார்.

அந்தப் பழக்கத்தை விடமுடியாமல் பல படித்தவர்களே சங்கடப்படுகையில் இதை எப்படிவிட முடிந்ததென்று கேட்டேன். ''கடவுளை வேண்டினேன். அவர் அருளால்தான் அப்பழக்கத்தைவிட முடிந்தது'' என்று தன் அனுபவத்தைச் சொன்னார்.

கடவுளை உண்மையில் வேண்டினால் நமது கெட்ட பழக்கங்களை நீக்கி நம்மை திருத்திவிட அவரால் முடியாதா?

ஃ ஃ ஃ

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை, பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம், சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட, அத்தன் எனக்கருளிய வாறு யார் பெறுவார் அச்சோவே.

— மாணிக்கவாசக சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்புவாத இயக்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இந்திய ஒருமைப்பாடுச் சபைக் கூட்ட விவாதத்தில் கருத்து

ஸ்ரீநகர், ஜூன் 21

ஸ்ரீநகரில் கூடியுள்ள இந்திய ஒருமைப்பாடு சபை, அது நேற்று அமைத்த மூன்று கமிட்டிகளின் அறிக்கைகளை இன்று பரிசிலனை செய்யும்.

வகுப்புவாத பிராந்திய, கல்வி அம்சங்களை ஆராய்வதற்கெனச் சபை நேற்று மூன்று கமிட்டிகளை நியமித்தது. வகுப்புவாத அம்சங்களை ஆராயும் கமிட்டியின் அமைப்பாளராக ஆந்திர முதல் மந்திரி திரு. கே. பிரமானந்தரெட்டி தெரிவு செய்யப்பட்டுள்ளார். பிராந்திய அம்சங்களை ஆராயும் கமிட்டியின் அமைப்பாளராகப் பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். ஜி. கோரேயும், கல்வி அம்சங்களை ஆராயும் கமிட்டி அமைப்பாளராகப் பம்பாய் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. கஜேந்திரகட்கரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நேற்று நடைபெற்ற சபையின் விவாதத்தில், பல கட்சித்தலைவர்களும் தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். நாட்டின் பதற்ற நிலையை வலியுறுத்துவது. அதை அணுகுவது பற்றி இவ்விவாதத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும், அதை நீக்குவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டுமென்பது பற்றி ஒருமனதான கருத்து நிலவியது.

தேசிய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதற்குத் திட்டங்கள் தீட்டுவதைத் தவிர்த்து, பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதன் அவசியத்தைப் பலபேச்சாளர்கள் வலியுறுத்தினர்.

### இந்திரா உரை

விவாதத்தை ஆரம்பித்து வைத்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி விவாதத்துக்கான சுருதியை மீட்டினார். தேசிய ஒருமைப்பாடு நாட்டுக்கு அவசியமான தேவையென்பது மட்டுமன்றி, நாடு உயிர் வாழ்வதற்கு அது அத்தியாவசியமானதுங்கூட என்று திருமதி இந்திரா கூறினார்.

### 'சேனைகள்' பற்றி சவான்

இந்திய உள்துறை மந்திரி திரு. சவான் பேசுகையில் நாட்டில் தலைதூக்கும் வகுப்புவாதச் 'சேனை'கள் மக்களிடம் விரைவிலே பெற்றுவிடும் செல்வாக்கைப் பார்க்கத் தமக்கு ஆச்சரியமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

வகுப்புவாத பிராந்தியத்துக்கு எதிராகக் குறைந்தபட்ச திட்டமொன்று உருவாக்கப்படவேண்டியது மிகஅவசியம் என்றார் திரு. சவான்.

### கடும் நடவடிக்கை

வகுப்புவாத இயக்கங்கள் தலைவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் சபையில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. கலவர காலங்களில் சமூக விரோதிகள் எனக் கருதப்படுவோர் தடுப்புக்காவலில் வைக்கப்பட வேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

### பள்ளிக்கூடமுறை மாற்றப்படவேண்டும்

பிரபல கல்விமான் திரு. ஹுமாயின் கபீர் பேசுகையில், நாட்டில் நிலவும் தற்போதைய அரசாங்க பொது தனியார் பள்ளிக்கூட முறையை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக நாடுமுழுவதற்கும் ஒரே மாதிரியான பள்ளிக்கூட முறையை அரசாங்கம் நிறுவ முன்வரவேண்டுமெனக் கூறினார். அப்பள்ளிக்கூடங்களில் கல்விபயிலும் மாணவர்களிடம், தாம் முதலிலும் கடைசியிலும் இந்தியரே என்ற உணர்ச்சி ஏற்படவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

### பாடபுத்தகங்களில் ஒற்றுமை அம்சம்

கல்விப் பாடப் புத்தகங்களிலும் இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் அம்சங்கள் சேர்க்கப்படவேண்டுமெனச் சில கல்விமான்கள் கருத்துவெளியிட்டனர்.

வகுப்புவாதக் கலவர காலங்களின்போது, வகுப்புக் கொலைகளில் சம்பந்தப்பட்டோருக்கு மரண தண்டனை விதிக்கப்படவேண்டுமென ஓர் அரசியற் கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

### பிராந்திய உரிமைகள்

பிராந்திய உரிமைகள், பிராந்திய மொழி ஆகியவற்றுக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பதன் மூலம், வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்ட மத்திய அரசாங்கம் முயலவேண்டுமென்ற ஆலோசனையும் நேற்றைய விவாதத்தில் தெரிவிக்கப்பட்டது.

### தி. மு. க. கருத்து

தி. மு. க. வைச் சேர்ந்த திரு. செழியன் பேசுகையில், அரசியற் கட்சிகள் அனைத்துக்கும் ஓர் ஒழுக்கக் கட்டுப்பாடு விதிமுறை விதிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார். இந்தியா, பல இனங்களையும், மொழிகளையும் கொண்ட நாடானபடியினால், எந்தப் பிரச்சினையின் தீர்வும், சகல பிரிவினரையும் திருப்திப் படுவதாக அமைய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

விவாதம் இன்று தொடர்ந்து நடைபெறும்.

## செக். மாணவர்களுக்கு அதிக உரிமைகள்

பிராக். ஜூன் 21

செக்கோஸ்லாவாக்கிய மாணவர்களுக்கு, அந்நாட்டின் பல்கலைக்கழக விவகாரங்களில் அதிகமான உரிமை அளிப்பதென செக்கோஸ்லாவாக்கிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அரசாங்க உதவிப்படிப்பு நிதியையும் 40 சத வீதமாக அதிகரிப்பதெனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாணவர்களுக்கு அதிக இடவசதி, சாப்பாட்டு, மற்றும் வசதிகளும் அளிக்கப்படும்.

செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதி நொவொட்னியின் அரசாங்கத்தின் கல்விக் கொள்கையை எதிர்த்து மாணவர் ஆரம்பித்த இயக்கமே, சற்றில் சீர்திருத்த இயக்கமாக மாறி, நொவொட்னியையும் பதவியிலிருந்துராஜினாமாச்செய்ய வைத்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த ஒக்டோபரில், மாணவர்கள் இந்த எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்திருந்தார்கள்.

## கி. ஜெர்மன் பிரயாணிகளுக்கு விசேஷ வரி

### மூன்று வல்லரசுகள் நடவடிக்கை

பொன், ஜூன் 21

வட அத்திலாந்திக் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகளுக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் கிழக்கு பெர்லின் பிரஜைகளின் பிரயாணப் பத்திரங்கள் மீது பிரிட்டன் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளும், விசேஷ வரி ஒன்றை விதித்துள்ளன.

கிழக்கு—மேற்கு பெர்லின் போக்குவரத்தின் மீதுகிழக்கு பெர்லின் அண்மையில் விதித்த புதிய தடைகளுக்குப் பதில் நடவடிக்கையாகவே இம்மூன்று நாடுகளும் புதிய வரியை விதித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## ஹவுராவுக்கருகே ரயில்விபத்து

### நால்வர் மாண்டனர்

கல்கத்தா, ஜூன் 21

ஹவுராவுக்கு அருகே உள்ளூர் சாமான் ரயிலுடன் ஒரு பிரயாணிகள் ரயில்மோதிக் கொண்டதன் விளைவாக 4 பேர் உயிரிழந்தனர். மற்றும் 40பேருக்குக் காயம் ஏற்பட்டது.

காயமடைந்தவர்களில் மூவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளது மொத்தம் 11 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் மற்றவர்கள் திருப்பியனுப்பப் பட்டுள்ளனர்.

அமெரிக்க

## ஏழை மக்கள் இயக்கம் சட்ட மறுப்பாக மாறியது

வாஷிங்டன், ஜூன் 21

வாஷிங்டனில் நேற்றுமுன் தினம் ஆரம்பமாகிய ஏழை மக்களின் இயக்கம், இப்போது ஒரு சட்ட மறுப்பு இயக்கமாக மாறியுள்ளது.

விவசாய இலாகாக் கட்டிட வாயலை அடைத்துக் கொண்டிருந்ததற்காகவும், தெருப் போக்குவரத்தை நிறுத்துவதற்குக் காரணமாக இருந்ததற்காகவுமென 60 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இயக்கத்தின் தலைவரான டாக்டர் ரால்ப் அபெநதி, இயக்க நடவடிக்கைகள் மற்றைய நகரங்களுக்கும் பரவுமெனக் கூறினார்.

## திபேத் தலைநகரில் இராணுவச் சட்டம்

### சீனு பிறப்பித்துள்ளது?

மாஸ்கோ, ஜூன் 21

திபெத்தின் தலைநகரான லாசாவில், சீன அரசாங்கம் அண்மையில் இராணுவ சட்டத்தை அமுலாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைத் தெரிவித்துள்ள ரஷ்யப் பத்திரிகையான 'பிராவ்டா'. ஆயுதந்தாங்கிய பல மோதல்கள் லாஸாவில் ஏற்பட்டதைத் தொடர்ந்தே, இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மேலும் கூறியுள்ளது.

இதற்கிடையில், சீன மாகாணங்களில், மாசேதுங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல்களில், ஏறத்தாழ 100 பேர் கொல்லப்பட்டதாக வெளிநாட்டுப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சன்-யாட்-சென் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட சண்டையொன்றில், 14 மாணவர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

## பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை அதிகாரங்கள் குறைக்கப்படும்

### இதற்கான மசோதா விரைவில் வரும் என்கிறார் பிரதமர் வில்ஸன்

### 'சர்வகட்சி ஆலோசனைகளுக்கு இனி இடமே இல்லை'

லண்டன், ஜூன் 21

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் இரண்டாவது சபையானபிரபுக்கள் சபையின் அதிகாரங்களைகுறைக்கவும், சபை உறுப்பினரின் பரம்பரை அடிப்படையைநீக்கவுமான ஒரு மசோதா, பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் சமர்ப்பிக்கப் படுமென, பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் நேற்றுக்காமன்ஸ் சபையில் அறிவித்தார்.

காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்பட்ட ரொடீஷிய தடை மசோதாவைப் பிரபுக்கள்சபை நிராகரித்துள்ளது, வேண்டுமென்றே, திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட காரியமென்று பிரதமர் திரு. வில்ஸன் குறிப்பிட்டார். பிரபுக்கள் சபையின் இந்த நிராகரிப்பு, [illegible] வில் ஒரு மூன்மாதிரியோயில்லாத குறுக்கீடு என்றும், ஜனநாயகத்துக்கு ஒரு மறுப்பு என்றும் திரு. வில்ஸன் மேலும் கூறினார்.

'பதவியிலிருக்கும்தொழிற் கட்சி அரசாங்கம் ஒன்று, தனது அதிகாரங்களை தேர்தெடுக்கப்படாத ஒரு சபை கட்டுப்படுத்துவதை அனுமதிக்க முடியாது.' என்று பிரதமர் வில்ஸன் கூறினார்.



'இனி இடமே இல்லை'

காமன்ஸ்சபை நிறைவேற்றிய ஒரு மசோதாவைப் பிரபுக்கள் சபை நிராகரித்துள்ளபடியாமல், அச்சபைக்கான சீர்திருத்தங்கள் பற்றிய சர்வகட்சி ஆலோசனைகளுக்கு இனி இடமேயில்லை என்றார் திரு. வில்ஸன். மசோதா நிராகரிப்பு, சர்வகட்சி ஆலோசனைகளை மீறிய ஒரு நடவடிக்கையாகும் என்று அவர்குறிப்பிட்டார்.

பார்லிமெண்டின் நடப்புத் தொடர் கூட்ட ஆரம்பத்திலான அரசி உரையிலேயே பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள் குறைக்கப்படுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

### எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

பிரதமரின் உரைபற்றிப் பிரபுக்கள் சபையில் பேசிய எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சித்தலைவர், 'உண்மைகளின் திரிபு அது' என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிணற்றில் மிதந்த சடலம்: கொலையா, தற்கொலையா?

உடுப்பிட்டி, வியா.

முதல் நாள் காணாமற் போனவர் மறுநாள் கிணற்றினுள் இறந்து கிடக்கக் காணப்பட்டார். கரவெட்டி கிழக்கு, கொல்ல தெரு என்னுமிடத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

கிருஷ்ணர் பொன்னையா அல்லது வேலுப்பிள்ளை [வயது 45] என அழைக்கப்படும் நபரே மர்மமான முறையில் கிணற்றினுள் இறந்துகிடந்தார். 4 பிள்ளைகளுக்குத் தந்தையான காலஞ்சென்றவர் கொல் தொழிலாளியாவர்.

பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா மரண விசாரணை நடாத்தினார். காலஞ்சென்றவரின் மகனும், பொ. சிதேவன், க. மாணிக்கம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். பிரேத பரிசோதனையைத் தொடர்ந்து இறந்தவரின் மரணம் கொலையா, தற்கொலையா என்பதில் சந்தேகம் கொண்ட பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் விசாரணையை நிறுத்தித் தொடர்ந்து புலன் விசாரணையை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டார். அடுத்த மாதம் 4-ந் திகதி தீர்ப்பு வழங்கப்படும்.

கரவெட்டி மேற்குக் கிராம சேவையாளர் திரு. க. இரத்தினசிங்கமும் பருத்தித்துறைப் பொலிஸாரும் தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

# பிரயாணிகள் சங்கத்தின் புகார்

சுழிபுரம்' புதன்

"பிரதி போயா தினத்துக்கு அடுத்த தினம் காலை நேரத்தில் குறிப்பாக காலை 7-30 மணி தொடக்கம் ஒன்பது மணிவரையும் சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பிரயாணிகள் 782ம் இலக்க பஸ் சேவை சரியாக நடைபெறுவதால் பலத்த கஷ்டத்துக்குள்ளாகின்றனர்" என்ற மகஜர் ஒன்றை சுழிபுரம் கிராமசபை பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் வடபகுதி இ. போ. ச. முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்,

இப்படியான குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் கோரியுள்ளனர்.

---

# "கொள்கை புரியாதவர் பீதி கொள்கின்றனர்"

உடுப்பிட்டி, வெள்ளி

"கடந்த மூன்று வருட காலமாகக் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல அட்டூழியங்களைச் செய்து வருகின்றது. கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளைச் சரிவரப் புரியாதவர்களே எம்மைக் கண்டு வீண் பீதி கொள்ளுகின்றனர். ஏழைகளை மேன்மேலும் ஏழைகளாக்கும் முதலாளித்துவத்தை ஒடுக்குவதே எமது இலட்சியமாகும்."

இவ்வாறு நெல்லியடி கம்யூனிஸ்ட் (பீகிங் சார்பு) வாலிபர் சங்கத்தால் நெல்லியடி காளிகோவிலடி மைதானத்தில் நடாத்தப்பட்ட பாவனைப் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்ட எதிர்ப்புக் கூட்டத்தில் பேசுகையில் திரு. கரவைகந்தசாமி கூறினார். திரு. எஸ் ஆறுமுகம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. வீ. ஏ. கந்தசாமி பேசுகையில் பாவனைப்பொருட்களுக்குக் கட்டுப்பாடு விதித்துள்ளது அநீதியானது' அக்கிரமமானது என்றும் இச்சட்டத்தால் ஏழை மக்களே பாதிக்கப்படுவர் என்றும் குறிப்பிட்டார்.

திரு. கே டானியல் பேசுகையில் "தமிழ்க் கட்சிகள் இரண்டும் தமிழினத்திற்குத் தீங்கு நேரிடும் போது அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடுவதே உத்தமம்" என்றார்.

# தங்க நகைகள் திருட்டு

உடுப்பிட்டி, வெள்ளி

நாய்க்கு உணவைக் கொடுத்துத் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளது. நவிண்டில் என்னுமிடத்திலேயே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர், நவிண்டில், ஆழ்வார் ஸ்வைவு என்னுமிடத்தில் உள்ள கனகசுங்கம் என்னும் கார்ச் சாரதியின் வீட்டினுள் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் அங்குள்ள நாய்க்கு உணவைக் கொடுத்து ஏமாற்றி விட்டுச்சுமார் 3000 ரூபா பெறுமதியான தங்க நகைகளை களவாடிச் சென்றுவிளனர். நகைகள் வைக்கப்பட்டிருந்த பெட்டி வெளியே எறியப்பட்டிருந்ததாம்.

---

# புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபனதொழிலாளர் வட்டுக்கோட்டைக் கிளை நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு திரு ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தலைவர்:திரு எஸ்சுந்தரம், செயலாளர்: திரு கே நாரணி, தனாதிகாரி: திரு வி பி இராமு, உபதலைவர்: திரு எம் அதாம்மன், உபசெயலாளர்: திரு ஆர் பதன் செயற்கமிட்டி அங்கத்தவர்; திரு எஸ் இராசு.

---

# சங்கானையில் விவாகப் பதிவு அலுவலகம்

யாழ்ப்பாணம், சனி

விவாகப் பதிவுகாரர் கிளை அலுவலகம் ஒன்று இன்று மாலை சங்கானைப் பட்டின சபைக் காரியாலயத்தில் திறந்து வைக்கப்பட இருக்கின்றது. திரு. ஏ. சின்னையா விவாகப் பதிவுகாரராக இங்கு கடமையாற்றுவார். சங்கானை பட்டின சபை எடுத்துக் கொண்ட முயற்சியைத் தொடர்ந்தே இக்கிளை அலுவலகம் இங்கு திறக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி)

---

# வாலிபர் தற்கொலை

யாழ்ப்பாணம். சனி

சங்கானைப் பகுதியைச் சேர்ந்த ஜெயராசா இரத்தினசிங்கம் [வயது 28] நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்தார். எனக் கூறப்படும் இவர் சம்பவதினத்தன்று கை கால்களை அடித்துக் கொண்டிருந்ததாகவும், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் இவர் மரணமடைந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு என். இராசநாயகம் விசாரணை நடாத்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கா. நி)

# விவசாயப்போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி மேற்கு கிராமசேவையாளர் திரு. க. இரத்தினசிங்கம் இப் பகுதி விவசாயிகளுக்கிடையே நடாத்தும் உப உணவுப் பயிர்ச் செய்கைப் போட்டிக்கு விவசாயிகளிடமிருந்து 22 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவ் விவசாயிகளின் விண்ணப்பங்களும், பயிர்ச் செய்கைகளும் பார்வையிடப்பட்டு வருவதாகவும், போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு ... விவசாயப் பொருட்கள் பரிசளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ள நிவாரண நிதி

உடுப்பிட்டி, வெள்ளி

கடந்த வருடம் மார்கழி மாதம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வீடிழந்த ஏழைக் குடும்பங்களுக்கு கரவெட்டி கிழக்கு கவுந்திலி சனசமூக நிலையத்தில் வடமராட்சிக் காரியாதிகாரி திரு. என். ஜெயகாந்தனால் வெள்ள நிவாரணநிதி வழங்கப்பட்டது.

# சிரமதானம் மூலம் வீதி

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த வாலிபர்கள் ஆவரம்பிட்டியிலுள்ள வீதியைச் சிரமதானம் மூலம் செப்பனிட்டு வருகின்றனர். இச் சிரமதான இயக்கம் கிராம சேவையாளர் திரு. க, இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்று வருகிறது.

---

# உப சபாநாயகருக்கு வரவேற்பு

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

உப சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. மு.சிவசிதம்பரத்துக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியப் பேரவை இம் மாதம் 25ந் திகதி பிற்பகல் ஒரு வரவேற்பளிக்கவிருக்கின்றது

தலைவர் திரு, எஸ். இரத்தினசபாபதி தலைமைதாங்குவார்.

---

# நடைமுறை இலக்கண வகுப்பு

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

ஆங்கிலக் கல்வியறிவுடன் கீழ் வகுப்புகளில் தமிழ் போதிக்கும் ஆசிரியருக்கும் எழுத்தாளருக்கும் வாணி கலைக்கழகத்தில் நடைமுறை இலக்கண வகுப்பொன்று அடுத்த மாதம் ஆரம்பத்திலிருந்து நடக்கவிருக்கிறது. இலக்குநர் பண்டிதர் க வீரகத்தி இதற்கான பொறுப்பை மேற்கொண்டுள்ளார்

# சுகாதார பரிசோதகர் வேலைநிறுத்தம்

அளவெட்டி, வெள்ளி

இலங்கை பூராவிலுமுள்ள சுகாதாரப் பரிசோதகர்கள் சம்பள அடிப்படையை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இவர்களின் வேலைநிறுத்தம், சுகாதார வாரம் முடியும்வரை தொடருமெனத் தெரியவருகிறது இம்மாதம் 18ந் தேதி தொடக்கம் 24ந் தேதிவரை சுகாதார வாரம் கொண்டாடப்படுகிறது.

காங்கேசன்துறைப் பட்டினசபையினர் வழமைபோல் இம்முறை சுகாதார வாரத்தைக் கொண்டாடத் தீர்மானித்திருந்தும் சுகாதார பரிசோதகர்களின் வேலைநிறுத்தத்தையடுத்து சுகாதார விழா நடைபெறுதெனத் தெரியவருகிறது.

இப்பட்டினசபையின் சுகாதாரச்சேவை பாதிக்கப் பட்டபொழுதும் பட்டின சபைத் தலைவரின் முயற்சியால் ஓரளவு சுகாதாரச் சேவை சீரடைந்ததாகத் தெரியவருகிறது.

---

# இடமாற்றம்

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியை திருமதி எஸ் சிவசுப்பிரமணியம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திருமதி எஸ். முத்துத்தம்பி பருத்தித்துறைப் பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு விசேட சங்கீத ஆசிரியையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

* * *

அளவெட்டி வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபையில் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. எஸ் ஐயம்பிள்ளை பதவி உயர்வுடன் கோலை நகரசபைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டார். அவர் இடத்துக்கு கோலை நகரசபையில் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு எஸ். சின்னத்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# திறந்து வைத்தார்

அளவெட்டி, வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள், பட்டினசபையின் 'டிரக்டர்' விடுவதற்குச் சுமார் 6,000 ரூபாய் செலவில் அமைந்த ஊர்திச்சாலையைச் சமயமுறைப்படி பட்டினசபைத் தலைவர் திரு. ஆ வ. சதாசிவம் பாவனைக்குத் திறந்து வைத்தார்.

# ஒரு மாத எச்சரிக்கை: பிரேரணை வருகிறது

அளவெட்டி, வெள்ளி

"எமது ஆறு கோரிக்கைகளையும் 1-7-68-ல் இருந்து ஒரு மாதத்துக்குள் தீர்க்க வேண்டும். தீர்க்காவிட்டால் வேலை நிறுத்தம் உட்பட தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும்."

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் ஓர் எச்சரிக்கை பிரேரணை அகில இலங்கை அஞ்சல் தொலைத்தொடர்புச் சேவையாளர் சங்க 22-வது வருடாந்தக் கூட்டத்தில் கொண்டுவரப் படவுள்ளது.

கோரிக்கைகளில் சில பின்வருமாறு:

சங்கத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் அஞ்சல் அதிபர்களினதும் மற்றும் சகல தரத்தினரதும் சம்பள உயர்வுகள்.

நிர்ணயிக்கப்பட்டகடமை நேரத்திற்கு மேம்பட்ட கடமைகளுக்கு மேலதிக நேரக் கூலி வழங்கல்.

அஞ்சல் அதிபர்கள் இரண்டாம் வகுப்பிலிருந்து உதவி அஞ்சல் அதிபர் நாயகத்தின் பதவிவரை சகல நிலைகளிலுமுள்ள நியமனங்கள், பதவியேற்றங்கள் ஆகியவற்றிலுள்ள எல்லையற்ற வேறுமுள்ள கால தாமதம்.

அஞ்சல் அதிபர் கந்தியாளர் சேவையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் அந்தந்த நேரத்திற் கேற்ற மாற்றங்கள், பதவியேற்ற வழிவகைகளைத் திட்டமிட்டு ஒடுக்குதல், ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையான நடைமுறைகளுக்கு ஏற்காத வகையில் உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்தல்.

# அடுத்த ஆண்டு போயா தினங்கள்

கொழும்பு, வெள்ளி

கருகொந்தை வேபஞ்ஞாசேகர மகாநாயகதேரோ தலைமையின்கீழ் கூடியகுழுவினால் நயமிக்கப்பட்டு, உள்நாட்டு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 1969-ம்ஆண்டிற்கான போயாவிடுமுறை நாட்கள்:

**ஜனவரி**

2 வியாழன் (பூரணை) 10 வெள்ளி (அபரபக்கஅட்டமி) 17 வெள்ளி (அமாவாசை) 25சனி (சுக்கிலபக்கஅட்டமி)

**பெப்ரவரி**

1 சனி (பூரணை) 9ஞாயிறு (அபரபக்க அட்டமி 16 ஞாயிறு (அமாவாசை) 24 திங்கள் (சுக்கிலபக்கஅட்டமி).

**மார்ச்**

3திங்கள் (பூரணை) 11செவ்வாய் (அபரபக்க அட்டமி) 18 செவ்வாய் (அமாவாசை) 26 புதன் (சுக்கிலபக்க அட்டமி).

**ஏப்ரல்**

2 புதன் (பூரணை) 9 புதன் (அபரபக்க அட்டமி) 16 புதன் (அமாவாசை) 24 வியாழன் [சுக்கிலபக்க அட்டமி].

**மே**

1 வியாழன் [பூரணை] 8 வியாழன் [அபரபக்க அட்டமி] 16 வெள்ளி [அமாவாசை] 23 வெள்ளி [சுக்கிலபக்க அட்டமி] 31 சனி [பூரணை].

**ஜூன்**

7 சனி [அபரபக்கஅட்டமி] 14 சனி [அமாவாசை] 22 ஞாயிறு [சுக்கிலபக்க அட்டமி] 29 ஞாயிறு [பூரணை].

**ஜூலை**

6 ஞாயிறு [அபரபக்கஅட்டமி] 13 ஞாயிறு [அமாவாசை] 21 திங்கள் [சுக்கிலபக்க அட்டமி] 28 திங்கள் [பூரணை].

**ஆகஸ்ட்**

5 செவ்வாய் [அபரபக்க அட்டமி] 12 செவ்வாய் [அமாவாசை] 20 புதன் [சுக்கிலபக்க அட்டமி] 27 புதன் [பூரணை]

**செப்டம்பர்**

3 புதன் [அபரபக்க அட்டமி] 10புதன் [அமாவாசை] 18 வியாழன் [சுக்கிலபக்க அட்டமி] 25 வியாழன் [பூரணை].

**அக்டோபர்**

3 வெள்ளி [அபரபக்கஅட்டமி] 10 வெள்ளி [அமாவாசை] 18 சனி [சுக்கிலபக்க அட்டமி] 25 சனி (பூரணை).

**நவம்பர்**

1சனி (அபரபக்கஅட்டமி) 8 சனி (அமாவாசை) 16 ஞாயிறு [சுக்கிலபக்க அட்டமி] 23 ஞாயிறு [பூரணை

**டிசம்பர்**

1 திங்கள் (அபரபக்க அட்டமி] 8 திங்கள் [அமாவாசை] 16 செவ்வாய் [சுக்கிலபக்க அட்டமி] 23 செவ்வாய் [பூரணை] 30 செவ்வாய் (அபரபக்க அட்டமி).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்


அரசாங்க கேள்விகள்
பொதுவேலைத் திணைக்களம்

என் 1594-தனைமன்னார் தபாற்கந்தோர் /கட்டிடங்களில் மேலதிகமான வேலைகளும் திருத்தங்களும் செய்தல். கேள்விகள் முடிவுதிகதி 18/7/68. இதன் முழுவிபரங்களுக்கும் 21/6/68 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1ம் பகுதி, 11ம் தொகுதியைப் பார்க்கவும்.

GP 6178

MANOHARA
JAFFNA
Daily 6-30 & 10-00 P.M.
Shamy Kafoor
in
COFFEE HOUSE

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்
விஜயலட்சுமி
நடித்த
பவானி

வின்சர்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி

3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30,
போனாஇனங்கவிக்4காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா
நடிக்கும்
முகூர்த்த நாள்

யாழ்ப்பாண
மாநகரசபை

கேள்வி
அறிவித்தல்

குவாறியில் வைத்து 1/2 அங்குலம், 3/4 அங்குலம் கிறசர் சல்லிகளையும், 2 அங்குலம் கிளறுகல்லு. உடைகல்லு, 6—9 அங்குல கற்களையும் விநியோகம் செய்வதற்கு 5-7-68 நண்பகல் 12-00 மணிவரை கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.


கேள்விகள் கோர விரும்புவோர் 30-6-68 நண்பகல் 12-00 மணிக்குமுன் ரூபா 5/- படிவப் பெறுமதியாகவும், ரூபா 25/- கேள்வி வைப்புப் பணமாகவும் செலுத்தி, கேள்விப் படிவங்களைப் பெற்று அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் நேரிலோ, கடித மூலமாகவோ 5-7-68 நண்பகல் 12-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கலாம். குறைந்த கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

மேல் விபரங்களை மாநகர மராமத்து பொறியியலாளரிடம் அலுவலக நேரத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

வே. தங்கவேலு
பதில் ஆணையாளர்.

மாநகர அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
20-6-68. 841

கிங்ஸ்லி பிளாசா மைலன்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) விஜிதா (சுட்டன்) அயன் (மன்னார்)
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நடித்த


ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு


# 'இந்தக் கொலையினால் தமிழர் வேதனைப் படுகின்றனர்'

கிளிநொச்சி, வெள்ளி

"சில திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் அறியாமையாலும், அதிகாரத்தாலும், சிங்களச்சொற்களைத் தமிழிலே புகுத்தி தமிழைக் கொலை செய்கின்றன. இது தமிழ் மக்களுக்கு வெறுப்பையும் வேதனையையும் கொடுக்கின்றது.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், அரசாங்க அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்மக்களிடையே பகைமையை வளர்க்கும் இந்தப் புதுப்போக்கை தடுத்து நிறுத்தி இதுவரை தமிழிலே புகுத்தப்பட்ட சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை வழங்குமாறு கடித மூலமும், நேரிலும் கேட்டுக்கொண்டேன். உங்கள் முயற்சி பயனளித்ததாகத் தெரியவில்லை. இதனாலேயே மீண்டும் நடவடிக்கை எடுக்குமாறு எழுதுகிறேன்.

சிங்கள தமிழ் மக்களின் நல்லுறவையும், தமிழ் மொழியின் ஆக்கத்தையும் கருதி இனிமேலாவது தமிழிலே சிங்களச்சொற்கள் புகுத்தப்படுவதைத் தடுத்து எல்லாத் திணைக்களங்களுக்கும் கூட்டுத்தாபனங்களுக்கும் இதுபற்றி ஒரு சுற்றறிக்கை அனுப்புங்கள்.

'லக்சல', 'ஜாதிக சம்பத்', 'சலுசல', 'தேசத்த' ஆகிய சிங்களச் சொற்களுக்கு உடனடியாக தமிழில் சொற்கள் அமைக்குமாறு வேண்டுகிறேன்.

## நாரந்தனை வென்றது

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை நேருஜீ சனசமூகநிலைய, விவேகானந்தா விளையாட்டுக் கோஷ்டிக்கும், நாரந்தனை-தாமனாட்டி காந்திஜீ சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்கும் சிநேகபூர்வமாக நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் நாரந்தனை கோஷ்டியினர் வெற்றி பெற்றனர். வட்டுக்கோட்டை நேருஜீ சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றது.

போட்டிக்கு மத்தியஸ்தராக தொல்புரம் கிராம சேவையாளர் திரு. மு. தர்மதாசன் கடமையாற்றினார்.

## 72 மாணவருக்கு ஓர் ஆசிரியை

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

ஈரவெட்டிப் பகுதியிலுள்ள றோமன் கத்தோலிக்க பாடசாலையொன்றில் 3ம் வகுப்பில் மட்டும் 72 மாணவர் படிக்கின்றனர். இவர்களுக்கு ஓர் ஆசிரியை மட்டுமே பொறுப்பாகக் கடமையாற்றுகிறார். இப்பாடசாலையில் இட நெருக்கடியும் இருப்பதால் சில வகுப்புகள் மர நிழலில் நடக்கின்றன. இது பற்றி உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
Richard Johnson &
Elke Sommer
in
DEADLIER THAN
THE MALE
(Adults Only)
no passes & no concession


## சாவித்திரிக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், சனி

நீர்வேலி தெற்கு இந்து கலவன்வித்தியாசாலை மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் சாவித்திரி இல்லம் முதலிடம் பெற்றது.

பாடசாலை மைதானத்தில் வட்டார வித்தியாதிகாரி திரு. வே. சண்முகநாதன் தலைமையில்போட்டி நடைபெற்றது.

நளாயினி, தமயந்தி, சாவித்திரி இல்லங்களிடையே மோதல் இடம் பெற்றது.

சாவித்திரி இல்லம் 120 புள்ளிகளைப் பெற்றது. தமயந்தி இல்லம் சாவித்திரியிலும்பார்க்க ஒன்று குறைவாகப் 119 புள்ளிகளைப் பெற்றது. நளாயினி இல்லம் 112 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. க. சண்முகநாதன் பரிசில்களை வழங்கினார்.

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் விளையாட்டுச் சங்கங்களின் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாதம் 24-ம் திகதி முதல் அடுத்த மாதம் 31-ம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது. [கா. நி.]

## காங்கிரஸ் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

தமிழ்க் காங்கிரஸின் பிரசாரக் கூட்டம் நாளை மாலை சாவகச்சேரி சந்தை மைதானத்தில் பரிஸ்டர் எம். சிவானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், எம். சிவசிதம்பரம், ரி. சிவசிதம்பரம் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## திருக்குறள் போட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வள்ளுவர் தமிழ் மன்றம் நடத்திய திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள் வருமாறு:

செல்வன் எஸ். கதிர்காந்தன், ச. இந்திரன், க. சரத்சந்திரன்.

நால்வருக்கு ஆறுதல் பரிசு கிடைத்துள்ளது. மல்லாகத்தில் நடைபெறவிருக்கும் வள்ளுவர் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். (ந. நி.)

## நாளை தேர்தல்

கொழும்பு சனி

தெஹிவளை — கல்கிஸ்ஸை மாநகரசபை தேர்தல் நாளை நடைபெறும். நேற்றுடன் பிரதமர் டட்லி சேனநாயக்கா, எதிர்க்கட்சித்தலைவி ஸ்ரீமாவோ ஆகியோர் தங்கள் இறுதிப் பிரசாரக் கூட்டங்களை முடித்துக்கொண்டனர். மொத்தமாக 68 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். யு. என். பி. 29; ல. ச. ச. கட்சி 14; ஸ்ரீ. ல. சு. கட்சி 12; கம்யூனிஸ்ட் 3; சுயேட்சை 10.

திருகோணமலை, வெள்ளி

மூதூர் பஸ் டிப்போவிலுள்ள 11 பஸ்களில் 6 பஸ்களை தங்கவிடும் ஓடவைக்க முடியும் என்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பஸ் சர்வீஸ் விசாரணையில் கோரிக் கூறப்பட்டது.

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

டியூட்டரியில் சொத்துக்கள், தளபாடங்கள், தட்டச்சு யந்திரங்கள், டிப்பிளிகேட்டிங்யந்திரம் முதலியன விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். தபால் நிலையம், நீர்வேலி. 1377

### காணவில்லை

மோட்டார் பதிவுப்புத்தகம்: 55 Sri 2096 வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கும், பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் "நா. சிவரட்ணம் வைத்தியர், வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 1380

### தேவை

திறமைமிக்க தையல் ஆசிரியை தேவை. எழுத்து மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு ஆனி 30-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, மராட்சி மகளிர் மன்றம், பிரதான வீதி, பருத்தித்துறை. 1379


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 22-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 ஒலிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 கல்விச்சேவை 5-15 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 பாவனம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி—சைவ சஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 பாட்டு—விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை.

## வேலை நிறுத்தம் செய்வர்

அநுராதபுரம், வெள்ளி

ஒரு மாத காலத்திற்குள் புதிய தொலைபேசி இயந்திரத்திற்குள் புதிய தொலைபேசி இயந்திரத்தை இணைத்து தராத பட்சத்தில் அநுராதபுரம் தொலைபேசி ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். திரு. க. இராமச்சந்திரன் தபால்மா அதிபதிக்கு இத்தகவலை அனுப்பியுள்ளார்.

## 22-வது மகாநாடு

அளவெட்டி, வெள்ளி

அகில இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் 22-வது மகாநாடு அடுத்த மாதம் 1-ம், 2-ம் திகதிகளில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும்.

முதல் நாள் அன்று பேராளர் மகாநாடும், இரண்டாம் நாள் பூரண உறுப்பினர் மகாநாடும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபை வழங்க மறுத்த காணியை சுவீகரிக்க உத்தரவு?

## ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைப்பகுதி கட்ட ஏற்பாடு

### பண்ணையில் மருந்துகளஞ்சியம் நிறுவப்படும்

கொள்ளுப்பிட்டி, வியாழன்

**யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கென புதிதாக அமைக்கப்படவிருக்கும் வெளிநோயாளர் சிகிச்சைநிலையக் கட்டிடத்துக்கான அடிக்கல்லை சுகாதாரஅமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா நாட்டுவார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கட்டிமுடியும் நிலையிலுள்ள புதிய வார்ட்டையும் சுகாதார அமைச்சரே திறந்து வைப்பாரென்றும் பண்ணையில் நிறுவப்படவிருக்கும் வடமாகாண அரசினர் மருந்துக் களஞ்சியத்துக்கான அடிக்கல்லையும் அவரே நாட்டுவாரென்றும் அறியப்படுகிறது.**

**காணி சுவீகரிக்கப்படும்**

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைப்பகுதி வசதிக் குறைவாக இருப்பதாகவும் இடநெருக்கடி சமாளிக்க முடியாதிருப்பதாகவும் நீண்ட காலமாக புகார் கூறப்பட்டு வந்தது. வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதியொன்று தனியாக நிறுவப்பட வேண்டுமென ஆஸ்பத்திரி ஆலோசனைக் குழு சிபார்சு செய்தது. இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதும் ஆஸ்பத்திரியின் மேற்குப் பகுதிக்கும் மின்சாரநிலையத்துக்கும் இடையிலுள்ள காணியை வெளிநோயாளர் சிகிச்சைப்பகுதி கட்டுவதற்குத் தரவேண்டுமென யாழ்ப்பாண மாநகரசபையிடம் கோரப்பட்டது. இக்கோரிக்கையை மாநகர சபையினர் நிராகரித்து விட்டனர்.

இப்பொழுது மாநகர சபையினர் காணியை தராவிட்டாலும் அதை சுவீகரிப்பதற்கான அறிவித்தலை விரைவில் பிரகடனப்படுத்தும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது. சுவீகரிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பதினைந்து தினங்களின் பின் அரசாங்க அதிபர் அந்தக் காணியை ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் கையளிப்பார்.

இந்தக் காணி கிடைத்ததும் அடுத்த மாத இறுதிக்குள்ளாக கட்டிட வேலைகளை ஆரம்பிக்க யாழ்ப்பாண ஆஸ்பத்திரி நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

**பண்ணைக் காணி**

வடமாகாணத்தில் அரசினர் மருந்துக் களஞ்சியப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு சுகாதாரஅமைச்சு முன்னரே திட்டமிட்டிருந்தபோதிலும் காணிப் பிரச்னை சம்பந்தமாக இந்த முயற்சியும் பின்போடப்பட்டு வந்தது.

பண்ணையில் முடிக்குரிய காணியில்மருந்துக்களஞ்சிய பிரிவு அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது அந்தக் காணியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தினர் ஒலிபரப்புநிலையம் அமைப்பதற்கு அந்தக் காணியை எடுத்துள்ளதாகவும் அதைக் கொடுக்க முடியாதென்றும் மறுத்துவிட்டனர். இப்பொழுது பண்ணையில் உள்ள மார்பு நோய் சிகிச்சை காணியிலேயே மருந்துக்களஞ்சியக் கட்டிடம் அமைக்கப்படவிருக்கிறது.

சுகாதார அமைச்சர் அடுத்த மாதம் 27-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்வாரென்றும் அப்போது இந் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வாரென்றும் தெரிகிறது. [நக. நி]

---

**வைத்திய சுப்ரீண்டனின் சமயோசித முயற்சி:**

## 20 நோயாளிகளின் உயிர் தப்பியது

நல்லூர், வியாழன்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் உயிருடன் போராடிக்கொண்டிருந்த இருபது நோயாளர்களின் உயிர் வைத்திய சுப்ரீன்டெண்ட் டாக்டர் பி. சண்முகநாதனின் சமயோசித நடவடிக்கையால் காப்பாற்றப்பட்டது.

சத்திரசிகிச்சை ஆயுதங்களை அவிக்கும் ஒரு இயந்திரம் பழுதடைந்திருந்தது. இதற்குப் பதிலாக புதிய இயந்திரம் ஒன்று கொழும்பிலிருந்து இங்கு அனுப்பப்பட்டிருந்தபோதிலும் அது பொருத்தப்பட்டு செயல்படத் தொடங்கவில்லை. இதற்குள் இங்கு இயங்கிக்கொண்டிருந்த மற்றோர் இயந்திரமும் பழுதடைந்துவிட்டது. இந்நிலையில் அவசர சத்திர சிகிச்சைகள் கூட செய்ய முடியாது போய்விட்டது. இதனால் அவசர சத்திர சிகிச்சை செய்யப்பட வேண்டிய நோயாளர்களின் நிலை மோசமடைந்தது. கொழும்புக்கு அறிவித்தபோதிலும் உடனடியாக எதுவும் செய்ய முடியவில்லை. இச்சமயத்தில் வைத்திய அதிகாரி, புதிய இயந்திரத்திலிருந்து புதிய ஒரு பாகத்தை பழுதடைந்த பழைய இயந்திரத்தில் பொருத்தி அதை இயங்கச்செய்தார். சத்திரசிகிச்சைகளும் தடைபடாமல் நடந்தன.

---

### வேணன் உருவப்பட திரைநீக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் திரு. வேணன் அபயசேகராவின் உருவப்படம் இம்மாதம் 29-ம் திகதி அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்படும். அடுத்த மாதம்முதல் புதிய அரசாங்க அதிபராக பதவியேற்பவர் இத்திரைநீக்கத்தைச்செய்து வைப்பார்.

ஜூலை முதலாம் திகதி முதல் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாக திரு. வேணன் அபயசேகரா பதவிஉயர்வு பெற்றுச்செல்வதை முன்னிட்டு செயலக ஊழியர்கள் அளிக்கும் இப்பிரியாவிடை வைபவத்தில் 29-ம் திகதி மாலை தேநீர்விருந்துபசாரம் ஒன்றும் நடைபெறவிருக்கின்றது.

29-ம் திகதி இரவு செயலக ஊழியர்களின் இராப்போசன விருந்தும், 25-ம் திகதி பொதுமக்கள் இராப்போசன விருந்தும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [கா. நி]

---

### பாரிஸ்பேச்சுக்கள்

#### அமெரிக்க பாதுகாப்பு மந்திரி நம்பிக்கை

வாஷிங்டன் ஜூன் 21

அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரியான திரு. கிளார்க் கிளிபோர்ட் பாரிஸில் நடைபெறும் சமாதான பேச்சுவார்த்தைகள் சிறிது முன்னேற்றத்துக்கான அறிகுறிகளைக் காட்டுவதாகக் கூறினார்.

பேச்சுவார்த்தையின் ஆரம்பக்கட்டத்தில் எதிரி தரப்பினர் [illegible] இயக்கம் இப்போது முடிவடைந்து விட்டதாக அவர் கூறினார்.

---

## தேசியசுவீப்முடிவுகள்

மதவாச்சி, வெள்ளி

நேற்று மதவாச்சியில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 199-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:—

1-ம் பரிசு

43 G 0190 ரூ. 100,000

2-ம் பரிசு

40 Z 0525 ரூ. 40,000

3-ம் பரிசு

01 J 0454 ரூ. 10,000

தலா ரூ. 832 சதம் 80 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 24 J 0620 | 12 T 0517 |
| 40 D 0064 | 33 F 0483 |
| 28 D 0135 | 18 E 0221 |
| 30 Z 0419 | 31 D 0004 |
| 08 C 0680 | 14 F 0181 |
| 04 V 0501 | 48 V 0167 |
| 41 C 0405 | 11 F 0999 |
| 38 M 0798 | 43 U 0457 |
| 41 R 0037 | 32 Y 0242 |
| 13 A 0835 | 45 J 0110 |
| 19 C 0464 | 18 Z 0524 |
| 34 X 0245 | 21 S 0877 |
| 08 A 0390 | 04 Y 0502 |
| 24 P C679 | 12 X 0429 |
| 17 H 0717 | 26 G 0832 |
| 19 Q 0200 | 31 D 0925 |
| 08 Z 0589 | 11 N 0754 |
| 30 O 0586 | 38 O 0092 |
| 12 G 0275 | 09 N 0254 |
| 21 V 0108 | 48 X 0190 |
| 16 E 0468 | 22 N 0276 |
| 43 F 0160 | 24 N 0298 |
| 11 B 0030 | 29 J 0944 |
| 42 V 0465 | 24 M 0609 |
| 05 G 0817 | 21 F 0127 |
| 20 W 0162 | 36 E 0796 |
| 15 Y 0590 | 42 E 0904 |
| 07 K 0478 | 35 K 0928 |
| 12 H 0500 | 41 C 0507 |
| 41 A 0837 | 20 Y 0701 |
| 36 X 0521 | 45 L 0262 |
| 41 D 0528 | 29 D 0807 |
| 37 D 0390 | 01 U 0514 |
| 44 Z 0572 | 12 W 0888 |
| 19 S 0199 | 27 Z 0917 |
| 44 D 0267 | 12 R 0350 |
| 04 S 0171 | 45 Q 0935 |
| 31 F 0365 | 33 G 0996 |
| 31 X 0247 | 17 L 0820 |
| 14 F 0803 | 40 L 0256 |
| 30 O 0482 | 25 Z 0141 |
| 47 S 0945 | 45 P 0239 |
| 40 S 0415 | 35 E 0435 |
| 24 C 0815 | 16 F 0245 |
| 45 P 0641 | 40 N 0776 |
| 44 F 0326 | 11 Q 0238 |
| 14 C 0715 | 21 X 0381 |
| 18 E 0399 | 19 O 0011 |
| 44 L 0542 | 28 P 0094 |
| 37 U 0591 | 85 D 0100 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்)

---

### வருடாந்த உற்சவம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் பறுளை விநாயகர் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது.

---

### யாருடையது?

அளவு நாடாப்பெட்டியொன்று "ஈழநாடு" காரியாலய வாசலில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் 'ஈழநாடு'' காரியாலயத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

---

**ஏற்றுமதி**

### ஜூலை முதல் புது மாற்றம்

கொழும்பு, வெள்ளி

ஏற்றுமதி ஒழுங்கு முறைகளில் ஜூலைமாதம் முதலாந் தேதியிலிருந்து அடிப்படையான மாற்றம் நடைபெறவிருக்கிறது. இம்மாற்றத்தினால் தேயிலை, றப்பர், தெங்கு போன்ற பொருட்களைத் தவிர்ந்த ஏனைய உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிசெய்வதற்கு அரசாங்க உத்தரவு பெறத் தேவையில்லை என்றும் வங்கி நாணய மாற்று அனுமதிப் பத்திர உதவியுடன் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும் என்றும் வர்த்தக அமைச்சைச் சேர்ந்த திரு. ஏ. எஸ். நவரத்தினராசா பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.

---

### அன்னதான மண்டபம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய அன்னதானச் சபையினர், அன்னதானம் கொடுப்பதற்கென மண்டபம் ஒன்றை அமைத்துள்ளனர். இந்த அன்னதான மண்டபத்தில் ஒரே முறையில் சுமார் 600 பேருக்கு அன்னதானம் அளிக்கக்கூடிய வசதியேற்பட்டிருக்கிறது.

---

### குருபூசை விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சிலம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி கோயிலில் ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை இம்மாதம் 30ந் தேதி நடைபெறவிருக்கிறது.

---

### நான்கு கூட்டங்கள்

காலி, வெள்ளி

மாவட்டசபை மசோதாவை எதிர்த்து, கூட்டரசாங்கக் கட்சியினர் ரத்கம, அக்மீமன, ஹினிதும ஆகிய தொகுதிகளில் நான்கு கூட்டங்களை நடத்தினர்கள்.

---

### வாடகைப்பணம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரூபாவாக உயர்த்தியது மீன்பிடிப்பதையே தொழிலாகக்கொண்ட ஏழை வகுப்பினர்மீது சுமத்தப்பட்ட நீதியீனமான பாரமாகும். வாடகைப் பணத்தைப் படிப்படியாக கூட்டினால் ஏழை மக்களை அதிகம் பாதிக்காது. தற்பொழுது இந்தவாடகையை 5விருந்து 7.50 சதமாகக் கூட்டினால் குருநகர் மக்களைச் சந்திக்கச் செய்யக்கூடிய நிலையிலிருக்கிறேன். இதனை மாநகர சபை ஏற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கிறேன்''

எல்லோருக்கும்ஒரே மாதிரியாக வாடகையை அதிகரிப்பதெனத் தீர்மானித்து 5ரூபாவாக இருந்த வாடகையை பத்து ரூபாவாக அதிகரித்தோம்'' என்று அந்த அறிக்கை கூறுகிறது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் [illegible] 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org